**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**பழனி**
**முன்னிலை : திரு.இரா. கார்த்திகேயன்,பி.ஏ.,பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**2024–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 05 ஆம் நாள் வியாழக்கிழமை**

**இ.ம.எண்.15/2024**
**இன்**
**அ.வ.எண்.88/2019**

M.மும்தாஜ் பேகம் .....மனுதாரர்/ Proposed வாதி

1. A. முகம்மது யூசுப்
2. A. சேட்டு முபாரக் ..... வாதிகள்

/எதிர்/

1. கருப்புச்சாமி
2. சண்முகசுந்தரம்
3. நிர்வாக அதிகாரி அவர்கள்,
   பாலசமுத்திரம் பேரூராட்சி.
4. வட்டாட்சியர் அவர்கள், பழனி.
5. மாவட்ட ஆட்சியர் அவர்கள், திண்டுக்கல்.

...... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.அன்வர்தீன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ஹரிஹரன் அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 5

எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

**உத்தரவு**

இம்மனுவானது அசல் வழக்கில் மனுதாரரை வாதியாக சேர்க்க தக்க அனுமதி வழங்க கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10 (2) மற்றும் பிரிவு 151—ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுச் சுருக்கம்:—**

மனுதாரர் அசல் வழக்கில் 3ம் தரப்பினர். அசல் வழக்கு விசாரணை நிலுவையில் இருந்த போது கடந்த 12.01.2022ம் தேதி 2ம் வாதியிடம் இருந்து வழக்கு சொத்தினை கிரையம் பெற்று அனுபவித்து வந்ததாகவும், மனுதாரர் பெயரில் கூட்டு பட்டா ஏற்பட்டுள்ளதாகவும், அசல் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு அவசியமானது என்பதாலும், அசல் வழக்கில் மனுதாரரையும் தரப்பினராக சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே மனுச்சுருக்கம் ஆகும்.

**2) 1, 2 எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைச் சுருக்கம்:—**

அசல் வழக்கு நிலுவையில் இருந்தபோது மனுதாரர் பெற்ற கிரையம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. அசல் வழக்கு தள்ளுபடி ஆகி விடும் என்பதை அறிந்து வேண்டும் என்றே வாதிகளின் தூண்டுதலின் பேரில்

இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்பதே எதிருரைச்சுருக்கம் ஆகும்.

3) 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

4) இருதரப்பும் கேட்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மனுச்சங்கதிகளை வலியுறுத்தி மனுவை அனுமதிக்க வேண்டும் என வாதிட்டார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் எதிருரைச் சங்கதிகளை வலியுறுத்தி மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்டார்.

5) தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர் மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

6) **<u>தீர்வு:</u>**

I) இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

ii) அசல் வழக்கில் கடந்த 11.12.2020ம் தேதி எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது. பின்னிட்டு கடந்த 24.03.2023ம் தேதி வாதிகள் தரப்பு சாட்சி துவங்கப்பட்டுள்ளது. பின்னிட்டு வாதிகள் தரப்பில் தாக்கல் செய்த மனுவின் பேரில் கிராம நிர்வாக அலுவலருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, கடந்த 12.09.2023ம் தேதி அவர் வாதிகள் தரப்பு சாட்சி இரண்டாக சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் மீண்டும் வாதிகள் தரப்பு சாட்சி வா.சா.1 ஐ குறுக்கு விசாரணைக்காக அழைக்க பிரதிவாதிகள்

தரப்பில் மனு தாக்கல் செய்து, அனுமதிக்கப்பட்டு வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக இருந்த போது இம்மனு மனுதாரர்/3ம் நபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Iii) மனுதாரர் அசல் வழக்கின் 1ம் வாதியின் மனைவி என்பது மனுவுடன் தாக்கல் செய்துள்ள பிரமான பத்திரத்தில் உள்ள விபரங்கள் படி தெளிவாக தெரிய வருகின்றது. அதன்படி மனுதாரரின் கணவர் அசல் வழககில் 1ம் வாதியாக இருந்து அசல் வழக்கினை தொடர்ந்து நடத்தி வருகின்றார் என்பதும் தெரிய வருகின்றது. மனுதாரர் தன்னுடைய மனுவில் 2ம் வாதிக்கு சொந்தமான சொத்தை கடந்த 12.01.2022ம் தேதி கிரையம் பெற்றதாக குறிப்பிட்டுள்ளார். தன்னுடைய மனுவில் எந்த இடத்திலும் தன்னுடைய கணவரான அசல் வழக்கின் 1ம் வாதி தனக்கு எதிராக செயல்படுகிறார் என மனுதாரர் குறிப்பிட்டு சொல்லவில்லை.

iv) மேலும் 1ம் வாதியுடன் சேர்ந்து வாதியாக இவ்வழக்கை நடத்த அனுமதி கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் கிரையம் பெற்ற தேதிக்கு பிறகு பலமுறை அசல் வழக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டு, கடந்த 24.03.2023ம் தேதி அசல் வழக்கில் வாதிகள் தரப்பு சாட்சியம் துவங்கப்பட்டுள்ளது. பின்னிட்டு வாதிகள் தரப்பில் இரண்டு சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அசல் வழக்கு நிலுவையில் உள்ளது. வாதிகள் தரப்பு 1வது சாட்சியாக மனுதாரரின் கணவர் 1ம் வாதி சாட்சியம் அளித்துள்ளார். பின்னிட்டு பிரதிவாதிகள் தரப்பு தாக்கல் செய்யப்பட்ட மனுவின் பேரில் குறுக்கு விசாரணைக்காக மீண்டும் 1ம் வாதி அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு

நிலுவையில் இருந்த போது இம்மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

v) மேலும் மனுதாரர் வழக்கு நிலுவையில் இருந்த போது கிரையம் பெற்ற நபர் ஆவார். அவருடைய கணவர் 1ம் வாதி அசல் வழக்கில் தொடர்ந்து வழக்கை நடத்தி வருகின்றார். மனுதாரர் சொத்தை கிரையம் பெற்ற பின் உடனடியாக அசல் வழக்கில் சேர்ந்துகொள்ள மனு தாக்கல் செய்யவில்லை. அவருடைய கணவரான 1ம் வாதி அவருக்கு எதிராக செயல்படுகிறார் போன்ற எவ்வித சங்கதிகளும் மனுவில் கூறவில்லை. மாறாக அவர் கணவருடன் வழக்கில் வாதியாக சேர்ந்து கொள்ள அனுமதி கோரியுள்ளார். ஏற்கனவே மனுதாரரின் கணவர் அசல் வழக்கில் தரப்பினராக இருந்து அசல் வழக்கு நடந்து வரும் நிலையில், மனுதாரர் அசல் வழக்கு விசாரணை ஆரம்பிக்கும் முன்பே சொத்தை 2ம் வாதியிடம் இருந்து கிரையம் பெற்றுள்ள நிலையில், சாட்சி விசாரணை ஆரம்பிக்கப்பட்டு, பல நாட்கள் கடந்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளதிலிருந்து மனுதாரருக்கு அசல் வழக்கில் பங்கு பெற்று நடத்த வேண்டிய அவசியம் இல்லை என்றும், அசல் வழக்கின் முடிவை தாமதப்படுத்தும் நோக்கில் இம்மனு பின் யோசனையின் பேரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

vi) மனுதாரரின் கணவர் அசல் வழக்கை தொடர்ந்து நடத்தி வரும் நிலையில் வழக்கு இடையில் சொத்தை 2ம் வாதியிடம் இருந்து கிரையம் பெற்ற 1ம் வாதியின் மனைவியான மனுதாரரை அசல் வழக்கில் வாதியாக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றும். இம்மனு அசல் வழக்கை தாமதப்படுத்தும் நோக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றே

இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. ஆகவே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

முடிவாக மனுதாரர் மனு தள்ளுபடி செய்யப்படுகின்றது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எழுதப்பட்டு, விரிவாக்கம் செய்யப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2024–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 05ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R.KARTHIKEYAN Digitally signed by R.KARTHIKEYAN Date: 2024.09.05 18:47:15 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

R.KARTHIKEYAN Digitally signed by R.KARTHIKEYAN Date: 2024.09.05 18:47:23 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி
பழனி.

05.09.2024